ஸ்ரீ திரிபுரசுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராய நம:

# ஆர்யதர்மம்.

நம்முன்னோர்கள் திருஷ்டப்பிரயோஜனமான காரியங்களிலும்பரலோகத்தில் பயன்படுமாறு நியமாதிருஷ்டத்தைச்சேர்க்க, அனேகநியமங்களை ஏற்படுத்தியிருக்கிறார்கள். அதாவது—மல ஜல விஸர்ஜனாதிகள்எத்திசையை நோக்கிச்செய்யினும் பிரத்தியக்ஷத்தில் வெவ்வேறாகப்பயன் காணாவிடினும் பகலிலானால் வடக்குமுகமாகவும், இரவிலானால் தெற்குமுகமாகவுமிருந்துகொண்டு அவைகளைச் செய்யவேண்டுமென்று நியமம் செய்யப்படுகின்றது இந்நியமத்தால் ஒரு அதிருஷ்ட முண்டாவதாகக் கருதப்படுகிறது. இங்ஙனமே ஒவ்வொருகாரியங்களிலும் நியமம் செய்யப்படுகிறது, அதற்கெல்லாம் அதிருஷ்டமுண்டென தாத்பரியமாம், அந்த அதிருஷ்டமுண்டானாற்றான் பரலோகத்தில் பயன் பூர்ணமாகக்கிடைக்கும்,பின்னிட்டவருஷங்களிலும்பூமிநன்றாய் விளையவேண்டுமென்பதற்காக நீடித்தகாலம் நிலைத்திருக்கும்படியான உரம் போடுவதுபோலவாமிது. அத்தகையஉரம் போட்டால் அது பிரத்தியக்ஷமாகக் காணாவிடினும்ஸூக்ஷ்மரூபமாக நிலத்திற்குளிருந்துகொண்டேபின்னிட்டுப் பல வருஷங்களில் பயிர் செழித்து வருவதற்குக்காரணமாயிருப்பதுநீடித்தகாலம் பயிரிடுந்தொழில் பயின்றவர்களுக்குப்பிரத்தியக்ஷானுபவமல்லவா. அதுபோலவேஇந்நியமாதிருஷ்டங்களும் அவரவர்களுடைய மனதில் ஸூக்ஷ்மரூபமாய்ப் படிந்து கிடந்து அடுத்த பிறவியில் அந்த மனதிற்கு ஸாத்விகஸ்வபாவத்தை உண்டுபண்ணக்காரணமாகின்றனவாம். அதனாற்றான் சிலரை பிறப்பினாலேயே ஸாத்விகர்களாகக்காண்கிறோம். அத்தகைய அதிருஷ்டம் நியமப்படி நடக்காதவர்களுக்குக் கிடைக்காது. அதனால் அவர்கள் மறுபிறப்பில் ராஜஸதாமஸர்களாக ஜனிக்கின்றனர். பிறப்பினாலேயே ஸாத்விகர்களான பெரியோர்களைப் பலவாறாக தூஷிப்பவர்களை பார்க்கிறோமல்லவா. இதுபோலவே ஒவ்வொரு சிரௌதஸ்மார்த்த கர்மங்களில் கேவலாதிருஷ்டம் மாத்திரமுண்டாகி அது பூமியில் உரம்போல், மனதிற்படிந்திருந்து மறுபிறவியில் சுத்த ஸாத்விக குணத்திற்கு ஹேதுவாகின்றது. இதற்குத்தான் நம் முன்னோர் பாடுபட்டிருக்கிறார்கள். அது வர்ணாச்ரமதர்மானுஷ்டானத்தாலுண்டாவதாக தங்களது தபஸ்ஸின் வலிமையால் கண்டறிந்து நமக்கெல்லாம் உபகாரப்படுமாறு ஸ்மிருதிகளிலும் எழுதிவைத்திருக்கிறார்கள். அப்படியிருக்க தற்காலத்திய சிலருக்கு அந்தப்பெரியோர்களிடத்தில் நன்றியில்லாமல்போனதுமாத்திரமாயில்லாமல்,நமது பாரதபூமியில் வர்ணாசிரமப்பிரிவினை செய்து கெடுத்துவிட்டார்களென்ற விபரீதபாவனையுமுண்டாயிருக்கிறது. இதுபாரதபூமிக்கே போராதகாலந்தான். பெரியோர் வார்த்தை பத்தியமாகப்படாதவர்களுக்கு ஆயுஸ்ஸு குறைவென்று நமது சோதிடசாஸ்திரம் வைத்தியசாஸ்திரம் கூறுகின்றது, பெரியோரை தூஷித்து ஆயுஸ்ஸைக்குறைத்துக்கொள்ளாமல் அவர்சொற்படி நடந்து ஸுகித்திருப்போமாக. சுபம் !

பத்திராதிபர்.

ஆர்யதர்மம்.
விபவ-ஹு பங்குனி-மீ ௨௨

# நம்முன்னோர்களின் நோக்கம்.

ஸ்வபாவமாகவே வர்ணாச்ரம-தர்மாபிமானம், இல்லாதவர்களுக்கு எவ்வளவு சொன்னாலும் அவர்கள் அதை ஆதரிக்கப் போகிறதில்லை. ஒருவர்ணப்பெயரையும் ஆசிரமப்பெயரையும் வைத்துக்கொண்டவர்களே அதை தூஷிக்கிறார்களென்றால் வர்ணத்தையும் ஆசிரமத்தையும் விட்டு வேறுஜாதியில் பிறந்தவர்களா அதைக் கேட்கப்போகிறார்கள். இயற்கையால் வர்ணாச்ரமப் பற்றுள்ளவர்கள் எவ்வளவு பேர்கள் எவ்வளவோவிதமாக தூஷித்தபோதிலும் அதை விடப்போகிறதில்லை. வர்ணாசிரம தர்மத்தை விடுகிறாயா? அல்லது இந்தக் கத்திக்கு இரையாகிறாயா? என்று ஒருவன் கத்தியையுருவிக் கையிலேந்திக்கொண்டு கேட்டபோதிலும் கத்திக்கிரையானாலுமாவார்களேயன்றி தர்மத்தைக் கைவிடமாட்டார்கள். இதற்கு வேறு உதாஹரணம் தேடவேண்டாம். தற்காலத்தில்பிராமணர், அதிலும் வைதிகர் இவர்களைத்தலைக்கிளப்ப முடியாமல் கூட்டம் கூட்டமாக்ச் சேர்ந்து பலபேர் தூஷித்து வருகையிலும் வைதிகர் அவரது வைதிகப்பேச்சையேபேசிக்கொண்டு உலாவி வருகின்றார்களே; இதுவே உதாஹரணமாகும். இந்த ஸம்பவம் தற்போது மாத்திரம் நிகழ்ந்ததன்று. முன்யுகாந்தரங்களிலும் எவ்வளவோ தடவை நேர்ந்ததுண்டு. வேனன் என்றவோர் அரசன் ராஜ்யபாரம் செய்தபோது மிகக்கடுமையாய் நேர்ந்திருக்கிறது. கார்த்தவீர்யார்ஜுனன் காலத்தில் அவன் செய்த அநீதி இவ்வளவென்றில்லை. क्षत्रं ब्रह्ममुखं त्वासीत् க்ஷத்திரியன் பிராமணனையும், வைசியன் க்ஷத்திரியன் பிராமணன் இவர்களையும், மற்றவர் மூன்று வர்ணத்தவர்களையும் பிரதானமாக வைத்துக்கொண்டு அவர்களைப் பின்பற்றி நடந்து வந்தார்கள் என்று கூறியவாறு இயற்கையாய் அமைந்துள்ள பிராமணாதிகளின் பிராதான்னியத்தை ஸஹிக்காமல் கார்த்த வீர்யார்ஜுனன்

ஒரு காலத்தில் ஒரு பிராமணரது உபதேச வலிமையால் கிடைத்த பராக்ரம கர்வத்தினால் பிராமணர்களை அலக்ஷ்யம் செய்து

अद्य ब्रह्मोत्तरं लोकं करिष्ये क्षत्रियोत्तरम् ।

"இன்று முதல்பிராமணனை உயர்ந்தவனாகப்பாராட்டிவந்த உலகத்தை க்ஷத்திரியனை உயர்ந்தவனென்று பாராட்டும்படி செய்யப் போகிறேன்" என்று பிரதிக்ஞை செய்தான். இங்கு கரிஷ்யே என்று ஆத்மனே பதம் பிரயோகித்திருக்கிறபடியால் இந்தக்காரியம் சுய நலத்திற்காகவென்று பிரஸித்தமாயிற்று. கார்த்தவீர்யார்ஜுனன் அதன் பிறகு யாரைக்கண்டாலும் "என்னைக்காட்டிலும் உயர்ந்தவன் யாராவது இருக்கிறானா" வென்று கேட்கத் தலைப்பட்டான் "உன்னைவிட உயர்ந்தவர் இருப்பார்" என்று எவனாவது சொல்வானாகில் அப்படிப்பட்டவன் யார் என்று கேட்டுக்கொண்டு அங்கு சென்று போர் செய்து சிலவிடத்து ஜயிப்பான். சில விடத்தில் தோல்வியடைவான். தன் ராஜ்யமெங்கும் न यष्टव्यं न होतव्यं "யாகம் செய்யக்கூடாது. ஹோமம் செய்யக்கூடாது என்றிவ்வாறு பறைபறைந்துப் பிரஸித்தி செய்தான். இப்படியிருக்கையில் இந்த அநீதி ஸஹிக்கமுடியாத தேவர்கள் வாயுபகவானை அவனுக்கு நல்லபுத்தியுபதேசித்து வரும்படி அனுப்பினார்கள். அவர் ஒரு பிராமண ரூபியாகவந்து அவன் கொண்டிருக்கும் கெட்ட எண்ணத்தை மாற்றுவதற்காக அனேக உதாஹரணங்காட்டி ஒவ்வொரு உதாஹரணத்தின் முடிவிலும்

ब्रवीम्यन्यं ब्रूहि वा त्वं ब्राह्मणात्क्षत्रियं वरम् ।

"க்ஷத்திரியனைவிட உயர்ந்தவனாக இன்னொருவரைச் சொல்லுகிறேன். அல்லது பிராமணனைக் காட்டிலும், உயர்ந்தவனான க்ஷத்திரியனை நீ சொல்லுகிறாயா? என்று கேழ்க்கும்போது திகைத்து நின்ற அவனுக்கு மற்றொரு உபாக்யானம்கூறுவார். இவ்வாறு அனேக உபாக்கியானங்களாலும் உதாஹரணங்களாலும் போதிக்கக்கடைசியில் "எந்தப் பிராமணரது உபதேச வலிமையால் இவ்வளவுபெருமை உனக்குக் கிடைத்ததோ அந்தப்பிராமணன் இப்பொழுது உன்னை சபிப்பானாகில் உன் கதி எப்படியாகும் என்று சொல்லும்போது பயந்து நடுங்கி "இனி நான் இந்தத்தீயவழியில் செல்லமாட்டேன் நல்லவழி நாடி நடக்கிறேன்" என்று பிரார்த்

இத்துக்கொண்டு நல்ல ஸ்திதியிலிருந்தானென்று பாரதத்தில் ஆனு சாஸனிகபர்வத்தில் விஸ்தாரமாகக் கூறப்பட்டிருக்கின்றது.

இதுபோல் அனேகர் பிரதிக்ஞைசெய்துகாரியம் பலிக்காமல் ப்ரமித்து நின்றதாகப் பல கதைகள் இருக்கின்றன, அப்பொழு தெல்லாம் நம் முன்னோர்கள் வர்ணாச்ரம தர்மத்தைப் பரிகொடுத்து விடாமல் நாளது வரையில் காப்பாற்றி வந்திருக்கிறார்கள். இதையெல்லாம் தற்காலத்தியவர்கள்— என்ன சமத்காரமாய்க் கதை எழுதி வைத்துக்கொண்டிருக்கிறார்கள் என்று நமது சிறுவர்களுக்குப் போதிக்கின்றார்கள். "இயற்கையாயுள்ளதை இல்லையென்று மறைக்க என்ன விந்தையாகப் பேசுகிறார்கள்" என்று ஆர்யச்சிறுவர் கேட்பதை அவர் அறியார்போலும், ஜாதிபேதத்தால் துவேஷம் அதிகப்படுவதாக ஒரு யுக்தி கூறுகின்றார்கள். ஒரேஜாதியுள்ளவர்களுக்கு பரஸ்பரம் துவேஷமில்லாமலிருக்கிறதா, த்வீபாந்தரத்திலும் நம் பாரதநாட்டிலும் ஒரே ஜாதியாயுள்ளவர்கள் கலகம் இல்லாமலிருக்கிறார்களா? வெவ்வேறு ஜாதியுள்ளவர்களான இந்து முஸ்லீம்கள் சேர்ந்து சுயராஜ்யத்திற்காக உழைக்கவில்லையா? ஆகவே ஜாதி வித்யாஸத்தால் துவேஷமதிகப்படுவதாகக் கூறுவது வர்ணாச்ரமதர்ம துவேஷத்தால் ஏற்பட்டதேயன்றி வேறல்ல. ஹிந்துக்கள் என்று சொல்லிக்கொள்ளுகிறவர்கள் ஹிந்து சாஸ்திரத்தை மீறிப்பேசுவது உசிதமாகுமா? ஹிந்து சாஸ்திரத்தை மீறிப்பேசுகிறவர்களின் உபதேசம் ஹிந்துக்களுக்கு ஹிதமாகுமா? என்று நன்றாய் ஆலோசித்துப் பார்க்கவேணும். தற்காலத்தியவர்கள் இந்தமாதிரியெல்லாம் பேசுவார்கள்என்பதை நம்முன்னோர்கள் தெரிந்து கொள்ளாமலில்லை. வரும் காலத்து வைபவத்தை எழுதுகிறவிடத்தில் நன்றாய் எழுதியிருக்கிறார்கள். அதற்குள்ள பரிஹாரத்தையும் சொல்லியிருக்கிறார்கள். அதை நாம் தெரிந்து கொள்ளவில்லை. இப்படியெல்லாம் கூறுவதும், ஜாதி வித்யாஸம், உயர்வு, தாழ்வு, இவைகளைப் பாராட்டுவதும், நம்பாரதமாதாவுக்குப் பிரியமில்லாத கர்ணகடோரமான வார்த்தையென்று நம்மவர்களுக்குள்ளும் சிலர் கருதுகின்றார்களாம். வர்ணாச்ரமதர்மம் அழிந்துபோவதை பாரதமாதா ஒருபொழுதும் ஸம்மதிக்கமாட்டாள். என்றைக்கு வர்ணாச்ரமதர்மம் குறைபட்டதோ, எப்பொழுது வர்ணாச்ரம துவேஷிகள் அதிகப்படுவார்களோ

அப்பொழுதெல்லாம் நம் பாரதமாதா கோரூபந்தரித்து ஸத்ய லோகஞ்சென்று பிரும்மதேவரிடம் முறையிடுவதாக நமது ஹிந்து சாஸ்திரம் சொல்லுகிறது. இது கட்டுக்கதையென்றால் அப்படிச் சொல்லுகின்றவர் பேச்சு என்ன கதை. வர்ணாச்ரமிகளுக்கு சுயராஜ்யம் வேண்டாமா என்று ஒரு கேழ்வி போடுகிறார்கள், வர்ணாசிரமதர்மத்தைக் கைப்பற்றியவர் இம்மைப்பயனில் எதை மறுக்கின்றார். ஒன்றையாவது வர்ணாச்ரமிகள் வேண்டாமென்று சொல்லவில்லை; ஆனால் இதுவும் வேண்டும்; லோகாந்தரமும் வேண்டும்; அதற்காக வர்ணாச்ரம தர்மமும் வேண்டும் என்று அதிக ஆசைப்படுகிறார்களேயன்றி வேறில்லை. இதுபோலவே மற்றவர்களும் இம்மைப்பயனோடு நின்றுவிடாமல் நம்மைப்போல மறுமைப்பயனையுமடையவர்ணாச்ரமதர்மத்தைக்கைப்பற்றி இஹத்திலும் பரத்திலும் வேண்டியதையடைந்து ஸுகப்படவேணுமென்று "ஸர்வே ஜனா: ஸுகினோ பவந்து" என்று பரமேசுவரனைப் பிரார்த்தித்துக் கொண்டிருக்கிறார்கள். அதன்படியே எல்லோரும் நடந்து ஸகல சிரேயஸ்ஸையும் அடைவார்களாக.

ப—ர்.

---

## ஜலதர்மத்தின் பெருமை.

(176-வது பக்கத்தொடர்ச்சி.)

பார்வதீஹரஸம்வாதத்தில்—

पार्वत्युवाच- इदानीं श्रोतुमिच्छामि भगवन्करुणाकर ।
कूपप्रतिष्ठां विधिवत् शशिशेखर मे वद ॥ इत्यादि ।

பகவன் சந்திரசூட உங்களால் தடாகப்பிரதிஷ்டை, தனநிக்ஷேபம் பிரம்மவாஸ்துபிரதிஷ்டை சிவாலயப்பிரதிஷ்டை சொல்லப்பட்டது. இப்போது கூபப்பிரதிஷ்டாவிதியைக் கேழ்க்கவிரும்புகிறேன் என்றதுமுதல் பரமாத்மா கூபஸம்பந்தமான பிரதிஷ்டா விதி, கூபதர்மம் இவைகளைப் பார்வதிக்கு ஸவிஸ்தாரமாய்ச்சொன்னார். பரமசிவனே தடாககூபப் பிரதிஷ்டையைப் புகழ்ந்துபேசினாரென்றால் அதன் மகிமை அதிகம் என்பதில் என்ன ஸந்தேகம்?

பரோபகாரசீலமுள்ள தனவான்கள் தடாகங்களையும் கிணர்களையும் அடிக்கடி தூர்வை எடுத்தும், பொதுஜனநன்மைக்கு நல்ல கிணர்களைவெட்டி தொட்டிகள்கட்டிகயர் போட்டு விடுவார்களானல் அவர்களின் புண்யத்திற்கும், கியாதிக்கும் கணக்கேஇல்லை.

छायाभिर्निबिडाभिराभिरभितः फुल्लप्रसूनोदरा-
दुन्मीलद्भिरनुत्तमैः परिमलैः स्निग्धैश्च पुष्पैर्दलैः ।
मन्दस्पन्दवता शिवेन मरुता संसेविताश्चेदिह
क्लान्तिं पान्थजनास्त्यजन्ति सरसस्तीरेऽप्यलं मज्जनैः ॥

இந்தப்பிரகாரமாயுள்ள வாபீகூபதடாகாதிதர்மங்களைச்செய்யமுடியாதவர்கள் கோடைகாலத்திலும் அல்லது நிரந்தரமாகவும் प्रपा என்று சொல்லும்படியான தண்ணீர்ப்பந்தல் தர்மம்செய்யலாம்.

## தண்ணீர்பந்தலின் பெருமை.

सूतः— प्रपां कृत्वा सदा पान्थान् ग्रामस्थांश्चामृतोपमैः ।
कूपस्थवारिभिर्नित्यं तोषयामास धर्मतः ॥

தர்மாரஜ்யத்தில் ஒரு பிராம்மணர் கோடைகாலத்தில் கிணத்து ஜலத்தால் தண்ணீர்பந்தல் வைத்து வழிப்போக்கர்களையும் அந்த கிராமத்து ஜனங்களையும் தர்மம்தப்பாமல் திருப்திசெய்துவந்தார்.

ஸூதமுனிவாக்கியம்

निपानं कारयित्वा यं सायं प्रातस्समाहितः ।
तस्मिन्निक्षिप्य सुजलं तोषयामास गास्सदा ॥

கிணற்றிற்கு அருகாமையில் திவ்யமான தொட்டி கட்டி அதில் சுத்தஜலம்விட்டு காலைமாலை சேம்பலன்னியில் பசுமாடுகள் குடிக்கும்படி செய்தார். கோஸம்ரக்ஷணம் தர்மங்களில் முதன்மையானது.

गावो देवो ब्राह्मणश्चैकराशिः ।

பசுக்கள், தேவதைகள், பிராம்மணாள் ஸமமானகௌரவமுடையவர்கள்.

பசுக்கள் கட்டியிருக்கும் பக்கத்தில் கால்நீட்டிப் படுக்கலாகாது, படுத்திருக்கும் பசுக்களைக் காலால் தட்டி எழுப்பலாகாது

தர்மங்களில் ஜலதர்மம் உத்தமம், அதிலும் தண்ணீர்ப்பந்தல் உத்தமோத்தமம், இதை ஸ்ரீ ஸோமஸுந்தரக்கடவுள் கிருபாநிதி தானே செய்துகாட்டியிருக்கிறார்.

ஹாலாஸ்யமாஹாத்மியம்:—

பாண்டியதேசாதிபதி ராஜேந்திரபாண்டியனுக்கும் சோள தேசாதிபதிக்கும் ஒருஸமயம் யுத்தம் நேர்ந்தபொழுது கோடை காலம், மத்தியான்னநேரம் கோரமான யுத்தம், பாண்டியஸேனை தாகத்தால் பிடிக்கப்பட்டு யுத்தத்தில் நிற்கமுடியாமல் ஓட்டம் பிடிப்பதை பக்தபராதீனனான பகவான் கண்டு கருணைகூர்ந்து

रणस्थले सुविस्तीर्णां प्रपां निर्माय मायया ।
तत्र वेदमयैस्स्तम्भैः मञ्चं कृत्वा महोज्ज्वलम् ॥
तन्मध्ये सन्निविष्टस्सन् सुन्दरो देवनायकः ।
पुरस्स्थितं महाकुम्भं मायाशक्त्याकरोत्प्रभुः ॥
स्वकपर्दस्थगांगेयवारिभिः परिपूर्य तम् ।
तन्निस्सृतजलात्पाण्ड्यभटेभ्यः प्रददौ जलम् ॥

யுத்தபூமியிலே விஸ்தீர்ணமான தண்ணீர்ப்பந்தலைமாயயினாலேநிர்மித்து. அதில்நாலுவேதமயமான கால்களையுடையதாய்மஹாகெம்பீரமானபிரகாசம்தங்கிய மஞ்சத்தை செய்துகொண்டு ஸோமஸுந்தரர்தேவநாயகர் அத்ன்மத்தியில் உட்கார்ந்துகொண்டு தனக்கு முன்புரம் மாயாசக்தியால் மிகவும்பெரிதான தீர்த்தபாத்திரத்தைச் செய்துவைத்துக்கொண்டு பிரபு பரமதயாநாதன் ஜடையிலுள்ள கெங்காஜலத்தால் அதைநிரப்பி அதிலிருந்தும் வழிந்துவருகிறஜலத்தை எடுத்துகளைத்த பாண்டியஸேனைக்குக் குடுத்துகளைப்பைத்தீர்த்தார்பகவான் செய்தஅனேகலீலைகளில் இதுஒன்று ஜலமோகெங்கை, குடுத்ததோ பகவான், தேவாமிருதத்திற்கு மேலானது அந்தஜலத்தைக்குடித்து, வர்ணபுஷ்டிபல சௌர்யாதிகளையடைந்து மருபடியுத்தம்செய்து ஜயமடைந்தது.

தண்ணீர்ப்பந்தல் தர்ம்மம் பெரிதென்று ஈசுவரன்பிரத்யக்ஷமாகச்செய்துகாட்டினார். சக்த்தியுள்ளவர்கள் தண்ணீர்ப்பந்தல் வைக்கவேண்டியது அவச்யம், பெரும்புண்ணியம் ஈசுவரப்பிரீதி, முடியாதவர்கள் தங்கள் வீட்டிற்கு வருகிறவர்களுக்காவது தீர்த்தம்

குடுத்து உதவவேணும் சூத்திரன்குடித்தால் மீதிஜலம் சேஷமாய் விடும்என்றுநினைக்கலாகாது. ஒருவன் வாசலில்வந்து ஐயா! ஜலம் என்றால் உடனே குடுத்துமறுவேலை செய்யவேணும், இல்லாவிடில் நெஞ்சடைத்து அபாயம்நேரும், ஜீவகாருண்யத்தைமுன்னிட்டுச் செய்யக்கூடிய கார்யங்களில் இதுமுதன்மையானது.

तृणानि भूमिरुदकं वाक्चतुर्थी च सूनृता ।
एतान्यपि सतां गेहे नोच्छिद्यन्ते कदाचन ॥

புண்ணியவான்கள் வீட்டில் ஆஹாரவஸ்துக்கள் தங்குவதற்கு இடம், தீர்த்தம், அன்பானவார்த்தை இவைகள் எப்போதும் இருக்கும். (இப்படி ஜலதர்மத்தின் பெருமை)

பனையப்பட்டி வேங்கடேசய்யர்.

---

## பிராமணனுக்கு ஸ்நானாதிகர்மானுஷ்டானங்கள் ஆவச்யமா?

பிராமணனிடத்தில் மூதேவிஎன்ற ஓர் விஷம் எப்பொழுதும் குடிகொண்டிருப்பதாகச் சரித்திரம் இருந்துவருகிறது. ஆனால் அவ்விஷம் எப்பொழுது வந்தது, அதன் லக்ஷணமும் குணமும் எவ்விதம்? அதை நீக்கத்தக்க ஒளடதம் உண்டா? ஆனால் அது எப்பேர்ப்பட்டது எவ்வளவுகாலம் அதைஉட்கொள்ளவேண்டும் அதனால் அவ்விஷம்நீங்கி, ஸுகம்பெறக்கூடுமா இவைகளை நாம் சற்றுசிரத்தையுடன் ஆராய்ந்தறிவோமானால்தற்காலத்துன்பங்கள் நீங்கிஸுகம்பெருவோமென்பதில் சிறிதும் ஐயமில்லை. என்பதை இதனடியில்சிறிது சாஸ்திர, யுக்தி அனுபவத்துடன் விளக்குவாம்

மஹிமையுள்ள பிராம்மணஜீவன்ஸுகம்பெருவதற்காகவேவேத சாஸ்திர நியமச்சட்டங்களை ஓர் திவ்விய ஒளடதமாக பகவான் நமக்குஆக்ஞைசெய்திருக்கிறார். இது வெகுவிரிவான பிரிவுகளுள்ளது, ஸுகம் பெறும்மார்க்கமும் அவ்விதமே, ஆனால்இதில்நமக்கு ஹிதமானதைக் கண்டுபிடிப்பது எவ்விதமென்றால்; உலகின்கண் ரோகங்கள் அநேகம், அதற்கு ஒளஷதங்களும் அனேகமாக இருந்தபோதிலும் வைத்திய சிரேஷ்டனானவன் ரோகியின் ரோக காரணத்தையும் அதன்பிரிவுகளையும் அதற்குற்ற ஒளஷதவர்க்கங்

களையும் முன்னதாகக்கண்டுபிடித்துத்தகுந்த ஔடதம்கொடுத்து ரோகத்தைநீக்குவதுபோலவே நாமும் நமக்குள்ளதாகிய 'மூதேவி' விஷம் வந்தகாரணத்தையும் அதை விலக்கத்தகுந்த ஔடதத்தையும் சாஸ்திரமூலமாய்த் தேடிக்கண்டுபிடித்து அதையே உட்கொண்டு மூதேவி விஷத்தைநீக்கிக்கொள்ளவேண்டியது நமது முக்கியமான கடமையாகும். ரோகத்தின் நுட்பத்தை அறியாமல் பல ஔஷதங்களில் ஏதாவது சிலதுகளை உபயோகித்து வந்தால் அது பலரோகங்களையும், அதனால் பல துன்பங்களையும் அளித்துக்கடைசியாக இன்னரோகமென்று பகுத்தரிய ஸாத்தியமாகாமலும் அவதிப்பட்டுக் கடைசியாக இது ஏதோஒருபுதிய ரோகமென மனச் சாந்தியடைந்து முடிவில் அபாயத்தில் கொண்டுசேர்த்துவிடும் என்பது நிச்சயமானகாரியம். அதுபோலவே இந்த விஷத்தன்மையையும் அதன் நுட்பத்தையும் அதற்குற்ற ஔஷதத்தையும் கண்டுபிடித்து முறைப்படி உட்கொள்ளாமல்போனால் இந்தவிஷமும் பல துன்பங்களுடன் அபாயஸ்திதியையடையச்செய்துவிடும்என்பதும் நிச்சயம். அவ்விதமே நாமும் இப்பொழுது இவ்வித அரிஷ்டம் நம்மிடமிருப்பதாக அறிந்துகொள்ளாமலும் வெகுமார்க்கமாக அதைவிலக்கமுயன்றும் பயன்படாமலும், வலையிலகப்பட்டமானைப்போலவும் கொப்பத்தில் விழுந்தயானையைப்போலவும்கடைத்தேர வழியறியாமல் தபித்து வெதும்பி வாடிவருகிறோம். இதற்கு நவீனவித்தியாப்பியாஸமே முக்கிய காரணம். ஏனெனில் இந்த வித்தியாப்பியாஸத்தின்பயனாக நமது "ஸதாசாரம் சாந்தமடைந்துவிட்டது; துராசாரம் துள்ளிவிளையாடத் துடங்கிவிட்டது, அதனால் பாபமும் ரோகமும் நம்மைச்சூழ்ந்து பற்றிக்கொண்டதால் அவதிப்பட்டு வருவதுடன் நமது புராதனரிஷிகளின் மதுரமான ஆசாரம் அனுஷ்டானங்கள் நமக்குத்தற்காலம் வேம்பின்காய்போல கசப்புள்ளதாகவும் துராசாரங்கள் மதுராஸமாக மாறியும்விட்டன. இதனால் நம்மிடத்தில் 'மூதேவி' விஷமிருப்பதாகக் கூறும் சரித்திரமானது உண்மைதானென்ன வெளிப்பட்டுவிட்டது. எவ்வாறென்றால் ஒருவன் சரீரத்தில் விஷம் இருக்கின்றதாவென்று அறிவதற்கு விஷவைத்தியன் கசப்பான இலுப்பைப்புண்ணாக்கைத் தின்னும்படி கொடுத்து அது இனிக்குமாகில் விஷமிருப்பதாயும், அது தனது ஸ்வயமானபடி கசக்குமாகில் விஷமில்லை என்றுமறிந்து

திருந்தி ஔடதம் கொடுத்துச்சிகிச்சையை செய்வது வழக்கமான கார்யம். அதுபோலவே இப்போது நமது முன்னோர்களான ரிஷிகள் ஆசரித்துவந்த ஸதாசாரநியமங்களுக்கு நேர்விரோதமானதும் பெரியோர்கள் கசந்தவஸ்துவை விலக்குவது போல விலக்கி இருப்பதுமாகிய துராசாரங்கள் நமக்கிப்பொழுது மதாமாகமாறியிருப்பதால் நம்மிடம் மூதேவிவிஷம் ஏராளமாக யிருப்பதாகவே நிச்சயமாய் விளங்கிவிட்டது. காருண்யம்வாய்ந்த நமது முன்னோர்களான வேதவியாஸாதி ரிஷிகள், மஹாபாரதம்முதலிய சாஸ்திரங்களின்மூலமாக நமதுஸ–கதுக்ககாரணங்களையும்நல்வழியாகச்சுகம் பெரும்மார்க்கங்களையும் நன்கு காண்பவித்திருக்கிறார்கள். அவற்றில் மகாபாரதம் ஆனுசாஸனிகபர்வத்தில் பிராம்மணன் முகத்தில் மூதேவிவந்தகாரணத்தையும் அதைவிலக்கவேண்டி ஔஷததுல்யமான சிலஸதாசாரங்களையும் நியமித்திருப்பதான சரித்திரத்தை உசிதமாகச்சொல்லி இவ்வியாஸத்தை முடித்துக் கொள்வாம்.

“ஸு–மித்திரன்” என்ற ரிஷி ஒருவருக்கு ஓர் பசு இருந்தது. அதை அவர் மிக்கஆதரவுடன் ரக்ஷித்துவருங்கால் கிடாரிக்கன்று ஒன்றை ஈன்றது. அதையும் மிக்க ஆவலுடன் பரிபாலித்துவரவே பலநாட்களில்பத்துலக்ஷம்பசுக்களாக விருத்தியடைந்தன. அவைகளை தினமாக ரிஷியானவர் நல்ல புல், ஜலம், நிறைந்த இடங்களில் சிரத்தையாக மேய்த்துவந்தார். அப்பசுக்களும் அந்தரிஷியிடம் தங்கள் கன்றினிடம் வைத்திருக்கிற அன்புபோல அன்பு செலுத்திவந்தன, இந்தரிஷியும் கன்று களைப்போலவே பசுக்களின் முலைக்காம்பில் தனது வாயை வைத்துப்பால்குடிப்பார். அவ்வளவு ஸ்நேகமாக வளர்த்து வரவே ஒருநாள் ஓர் எரிக்கரையில் பசுக்கள் மேய்ந்துகொண்டிருக்க அவ்வேரியில் சில ஸ்திரீகள் அலங்காரத்துடன் ஸ்நானம்செய்து ஜலத்தைக்கலக்கிவிடவே அதைக்கண்ட இப்பசுக்கள் ஸ்திரீகளே! நீங்கள் யார்? எதற்காக ஜலத்தைக் கலங்கச் செய்கிறீர்கள் என்றன. அதற்கவர்கள் நாங்கள் முன்ஜன்மத்தில் பசுக்களாக இருந்தோம். இப்பொழுது கோலோகவாஸிகளாக ஜன்மம் பெற்று வஸித்துவருகிறோம். என்றார்கள். அதைக்கேட்ட பசுக்கள் ஸ்திரீகளே! எங்களையும் கோலோகவாஸிகளாகும்படி வரம் அளிக்கமாட்டீர்களா என்று

வேண்டிக்கொள்ள அப்போதவர்கள் பசுக்களே நீங்கள் "அக்நிதேவன்" என்ற ராஜனின் யாகபசுவாகத் தங்கள் பிராணனை ஸந்தோஷமாக விடுவீர்களானால் கோலோகமடையலாமென்று சொல்லித் தங்கள் ஸ்தானம் போனார்கள். அதைக்கேட்ட பசுக்கள் தங்களை அன்புடன் வளர்த்து வந்த 'ஸுமித்திரன்' என்ற ரிஷியையும் நற்கதியடையச் செய்யவேண்டுமென்றும் அதுவே அவரிடத்தில் செய்துவந்த ஸ்நேஹத்தின் அடையாளமாகும் என்றும் ஆனால் அவருக்குப்பிராணனைவிடமனம் வாவேண்டுமே என்றும் யோஜித்தகாலத்தில் கிராமத்தில் வஸித்த சிலகபிலபசுக்கள் இப்பசுக்களைப் பார்த்து நீங்கள் விசாரப்படவேண்டாம்; ஒருவேளை அவர் பிராணனைவிடயோசித்தால் நீங்கள் அவரைக்கொன்றுவது அவரையும் கோலோகம்கொண்டுபோகவேண்டியது.

அதனால் உங்களுக்குப் பாபமில்லையென்று ஸமாதானம் செய்யவே பசுக்கள் ரிஷியிடம்சென்று ஸ்வாமி! நாங்கள் கோலோகம் போகிறவழியைத் தேடிக்கொண்டிருக்கிறோம் நீங்களும் கோலோகம் வரவேண்டுமென்று வழியைச்சொல்லவே அதைக்கேட்ட ரிஷி பிராணனை விடமனமில்லாதவராய் அச்சமயம் தன்முகத்தைச் சுளுக்கினார். அக்காலத்தில் ஸமீபத்தில் இருந்த "கபில" என்ற கிராமப்பசுக்கள் அந்த ரிஷியின்மேல் பாய்ந்து அவரை மாய்த்தது கள். அதனால் ரிஷி திவ்யஉபசாரம் பெற்று கோலோகம் சென்றார். பிறகு பசுக்களும் "அக்நிதேவ" ராஜனிடம் சென்று ஸ்வாமி! தாங்கள் யாகபசுக்களாக எங்களை உபயோகித்து நற்கதியடையச்செய்யவேண்டுமென்று வேண்டிக்கொள்ள அவர் சிறிது யோஜித்து இவ்வளவு பசுக்களையும் எவ்விதம் கொல்வதென்று திகைத்துநிற்கவே, அதற்குப் பசுக்கள் ஸ்வாமி! இதனால் பாபமில்லை. நாங்கள் ஸந்தோஷமாக வருகிறோம், அதனால் நாங்களும் தாங்களும் நற்கதிபெறலாமென்று சொல்லவே அதைஅனுஸரித்து '1000வருடம் கோமேதம்' என்ற யாகம்செய்து ராஜன் நற்கதியையடைந்தான். பசுக்களும் கோலோகம் அடைந்தன, பசுக்களை ரக்ஷித்துவந்த ரிஷி நற்காரியத்தில் முகம் சுளிக்கின காரணத்தால் பிராமணன்முகத்தில் மூதேவி அன்றுமுதல் வாஸம்செய்யத்துடங்கினாள். இம்மூதேவியின் வாஸத்தை விலக்குவதற்காகவே பிராதஸ்நாநம், ஸந்தியாவந்தனம் முதலிய கர்மானுஷ்டானம் புண்யமந்திரஜபம், தெய்வபூஜை முத

லிய கர்மங்களைப் பிராமணன் தினமாக ஆசரித்துவரவேண்டு மென்றும் இவைகளைச்செய்யாத பிராமணன்முகத்தில் மூதேவி நித்தியவாஸம்செய்வாளென்றும் பாரதம் உபதேசித்திருப்பதால் மூதேவிவிஷத்தை விலக்கத்தக்க மருந்து ஸ்நாநாதிகளான கர்மானுஷ்டானங்களேதிவ்விய ஔடதம் என நன்கு விளங்கிற்று. நேயர்காள்! நமது பிராமணமஹிமை மிக அபாயஸ்திதியில் தற்காலம் நிற்பதற்கு மூதேவியின் விஷஜ்வாலையே முக்கிய காரணம் என விளங்கவில்லையா? அதற்குற்ற ஸ்நாநாதிகளான மருந்து ஒவ்வொருதினமும் நியமப்படி உட்கொண்டுவந்தால் சிறிதுகாலத்தில் மூதேவிவிஷம் நீங்கி திவ்வியமஹிமைபெற்றுச் சுகம்பெறலாம். இம்மருந்தே இவ்விஷத்தை விலக்கத்தகுந்த மருந்து, பிரத்தியக்ஷமாக நாம் ஸ்நாநம் ஸந்தியா வந்தனம் முதலான நித்தியகர்மானுஷ்டானத்தை முறையாகச் செய்துவந்தவனுடைய முகத்தையும் செய்யாதவனுடைய முகத்தையும் பார்த்தால் இத்தத்வம் நன்று விளங்கும். அநுபவத்தில் கண்டுகொள்ளலாம்.

'மூதேவி' என்ற விஷம் ஏற்பட்டகாலமும். அதற்குத்தகுந்த ஔடதமும் உபயோகித்துவரவேண்டி நியமானுஷ்டானங்களும் அதனால் பெறக்கூடிய நற்பயனும் நன்றாய் நமக்கு விளங்கிவிட்டபடியால் துராசாரத்தில் கசப்பு நமக்கு எப்பொழுது வருகிறதோ அப்போது 'மூதேவி' விஷம் நம்மிடமில்லை என்று பரீக்ஷையால் தெரிந்துகொண்டு அக்காலம்வரை ஸதாசாரத்திலேயே புத்தியை நாடச்செய்யும்படி ஸர்வேசுவரனை வேண்டிக்கொள்வோமாக.

சுபம். K. V. வீரமணிவாத்தியார்,
கொட்டாரக்கரை.

---

# ஸ்ரீமான் அப்பய்யதீக்ஷித சரிதம்.

विश्वोत्तरोत्तरविचित्रमनोरथस्य
यस्यैव शक्तिशकले सकलं समाप्तम् ।
अध्वानमध्वपतिमध्वविदो वदन्ति
तस्मै नमः त्रिभुवनैकविलक्षणाय ॥

हेमभूधरशरासनात्मजं हेमरत्नविलसत्किरीटिनम् ।
हेमगर्भसुरनायकं सदा हेमविघ्नपतिमानतोऽस्म्यहम् ॥

## (1) விரிஞ்சிபுரம்.

ஸ்ரீகாஞ்சியென்னும் முக்திககைத் தலைககாகக்கொண்ட தொண்டைமண்டலத்திலே, விரிஞ்சியென்று மறுநாமம் பூண்ட சதுர்முகனாலே பூஜிக்கப்பட்டதால், விரிஞ்சிபுரம் என்றுபெயர் வாய்ந்த சிவஸ்தலமொன்றுண்டு அத்தலத்தின் மேன்மையைச் சைவபுராணம் சதருத்ர ஸம்ஹிதையில் உள்ளவிரிஞ்சிபுர மாஹாத்மியத்தில் காணலாம்.

அப்புண்யஸ்தலம் பாவனமான பாலாற்றின் கரையிலமைந்துள்ளது- அத்தலத்தில், ஸ்ரீமாகதவல்லியம்பாளோடுகூடின ஸர்வேச்வரன் மார்க்க ஸஹாயர்என்ற திருநாமத்துடனே விளங்கிவருகிறார். அவ்வூரில் வக்ஷஸ்தல கணபதியென்ற மகாகணபதி பக்தாநுக்ரஹார்த்தமாக எப்போதும் ஸாந்நித்யம் வஹித்துவருகிறார்.

கங்காதரனின் தலையைக்கண்டதாகப் பொய்சொன்னபாபம் நீங்கும்பொருட்டு, ஆதிசைவராய் அவதரித்த பிரமன், மஹாலிங்கத்தைப்பூசிக்கமுடியாமையால் கவலைகொண்டு துதிக்கும்போது பகவான் தலை சாய்த்துக்கொடுத்து, அபிஷேகாதிகளைப்பெற்று அநுக்கிரஹித்தது இத்தலத்திலேயே, ஒவ்வொரு வருடத்திலும் கார்த்திகைமாதத்து ஞாயிற்றுக்கிழமைகளில் இதைச்சார்ந்த திருவிழா அங்கு விமரிசையாய் நடத்தப்பட்டுவருகிறது, இக்கருத்து அடியிற்கண்ட கங்காதராஷ்டகத்திலுள்ள ச்லோகத்தால் விசதமாகிறது.

बालं शैवकुलोद्भवं परिहसत्स्वज्ञातिवन्ध्वाकुलं
खिद्यन्तं निजपूर्ध्नि पुष्पनिचयं दातुं समुद्यत्करम् ।
दृष्ट्वानम्य शिरो विरिञ्चिनगरे ........................
आर्तत्राणपरायणः स भगवान्गङ्गाधरो मे गतिः ॥

ஸ்ரீமத் அப்பய்யதீக்ஷிதவம்சத்தார்களுக்கு இம்மார்க்கஸஹாயரே குலதெய்வம்என்று கீர்த்திசரீரத்தால் விளங்காநின்ற மன்னார்குடி மஹாமஹோபாத்யாயாளான தியாகராஜமகிகள், தமது தீக்ஷித வம்சாபரண க்ரந்தத்தின் மங்களச்லோகத்தால் அறிவிக்கிறார்கள்.

श्रीमत्क्षीरतरङ्गिणीतटगते पुण्ये विरिञ्चेः पुरे
नित्यं सन्निहितं किलाकलयितुं क्षीराभिषेकादरम् ।
श्रीगारुत्मतवल्लिकासहचरं मार्गे सहायं नृणाम्
श्रीमद्दीक्षितवंशदैवतवरं सञ्चिन्तये शङ्करम् ॥ என்று

## (2) ஆச்சார்ய தீக்ஷிதர்.

அச்சிவஸ்தலத்தின் அருகாமையில் ஸகல கலைகளையும் கசடறக்கற்று, ஆறுகன்மாக்களை தினந்தோறும் விதிவழுவாது நடத்தி சிவார்ப்பணஞ்செய்து பேரானந்தத்தில் மூழ்கினபூஸுரர்களாலே பிரக்கியாதிபெற்ற அடயப்பலம்என்ற ஒருசிறு அக்கிரஹாரமுண்டு அவ்வக்கிரஹாரத்தில் வனவாஸம் புகுந்த இராகவனையழைக்கச் சேனைகளுடன் சென்ற சக்ரவர்த்திகுமாரனான பரதனுக்கும் லோககண்டகனான இராவணனைப்பரிவாரத்துடன் அழித்து வானரஸைன்யங்களுடன் திரும்பித்தன்னையடைந்த ஸீதாராமனுக்கும் ஆச்சர்யமான ஆதித்தியத்தைச்செய்தவரான பரத்வாஜ மஹரிஷியின் மரபுஒன்று ஓங்கிவளர்ந்தது, அம்மரபில் ஸகல கலாவல்லவரும் சிஷ்யஸம்பத்தோடு கூடினவரும் ஸகலகர்மாக்களையுஞ் சிவார்ப்பணம்செய்பவருமான ஆச்சார்யதீக்ஷிதாள் என்ற சிவபக்தசிகாமணியொருவர் விளங்கினர். இதற்குப்பிரமாணம் நியாய ரக்ஷாமணியில் தெரிகிறது.

आसेतुबन्धतटमा च तुषारशैल-
माचार्यदीक्षित इति प्रथिताभिधानम् ।
अद्वैतचित्सुखमहाम्बुधिमग्नभाव-
मस्मत्पितामहमशेषगुरुं प्रपद्ये ॥ என்று

அக்காலத்தில் பிரபலமான கீர்த்திவாய்ந்த கிருஷ்ணராஜர் என்பவர் இம்மஹானைத் தனக்குக் குருவாகத்தேடிக் கொண்டார். இப்புலவரின் கவித் திறமையாவராலும் போற்றத் தக்கது.

ஒரு ஸமயத்தில் ஸ்ரீ காஞ்சியில் ஸ்ரீ வரதராஜ வஸந்தோத்ஸவத்தை இம்மஹானேடும்,பட்டமஹிஷியோடும்தரிசித்துக்கொண்டிருக்கின்ற ஸமயத்தில் கிருஷ்ணராஜனின் வேண்டுகோளால், இக்கவிமணியின் முககமலத்திலிருந்து அநாயாஸமாய் ஒரு சுலோகம் வெளிக்கிளம்பிற்று.

काञ्चित्काञ्चनगौराङ्गीं वीक्ष्य साक्षादिव श्रियम् ।
वरदः संशयापन्नः वक्षस्थलमवैक्षत ॥

இச்செய்புள் ஸ்ரீமான் அப்பய்யதீக்ஷிதரவர்கள் சித்ரமீமாம்ஸா என்ற அலங்கார கிரந்தத்தில் ஸந்தேஹாலங்காரத்திற்கு உதாஹரணமாகக் கையாளப்பட்டிருக்கிறது. "தங்கமேனியுள்ளவளும், ஸ்ரீதேவிபோன்றவளுமான ஒருத்தியைக்கண்டு வரதராஜர் ஐயங்கொண்டு தனது மார்புப் பிரதேசத்தை உற்று நோக்கினார். "ஸம்சயாபந்ந:" என்பதால் இலக்குமி, இப்பெண்மணி இவ்விருவரில் யாருக்கு வனப்பு அதிகமென்றோ; தனக்கொப்புயர்வுள்ளவர் யாருமிலர் எனச் செருக்குக்கொண்ட கமலை இவ்வழகியைக் கண்ணுற்றதும் எங்ஙனமிருக்கின்றனள்என்றோ ; மார்பில் எப்புறத்தில் இவ்வழகியையும் வைத்துக்கொள்ளலாமென்றோ ; அனேக ஸம்சயாகாரங்கள் 'வக்ஷஸ்தலமவைக்ஷத' என்பதால்த்வனிக்கின்றன. உடனே இச்செய்புளின் கருத்துணர்ந்த வேந்தனின் வேண்டுகோளால் இம்மஹான் வக்ஷஸ்தலாச்சார்யாள் என்ற திருநாமத்தை ஏற்றுக்கொண்டார். விரிஞ்சிபுரத்தில் விளங்காநின்ற வக்ஷஸ்தல கணபதியினிடத்துள்ள பக்திவாஸனுபலத்தால் அவரது கவிதையிலும் அப்பதம் அமைந்ததுபோலும்.

மேலும் முற்காலத்தில் காளிதாஸன் முதலான மஹாகவிகள் கவித்திறமையால் கையாளப்பட்ட பதங்களாலேயே பிருது பெற்றிருக்கின்றனர். அதாவது 1.தீபசிகா காளிதாஸன், 2.கண்டாமாகன், 3. சத்ரபாரவி, 4. இந்துமூராரி, 5. ரத்னகேடதீக்ஷிதர், இவை முதலான பிருதுப்பெயர்கள் கவிமணிகளால் கொண்டாடப்பட்டவைகளே. இவ்வாசார்யதீக்ஷிதாள் ஸர்வதோமுக யாகம் செய்தவரென்றும் இவரது ஆறுவது குமாரனை ரங்காராஜ தீக்ஷிதர் விச்வஜித்து யாகம் செய்தவரென்றும் ஸ்ரீமான் அப்பய்ய தீக்ஷிதாளின் மங்கள சுலோகத்தால் விசதமாகிறது.

विद्वद्गुरोः विहितविश्वजिदध्वरस्य
श्रीसर्वतोमुखमहाक्रतुयाजिसूनोः ।
श्रीरङ्गराजमखिनः श्रितचन्द्रमौलिः
अस्त्यप्पदीक्षित इति प्रथितस्तनूजः ॥

ஆச்சார்ய தீக்ஷிதாளுக்கு இரண்டு மனைவிகள். மூத்தவளுக்கு நான்கு குமாரர்களும், இளையவளுக்கு நான்கு குமாரர்களுமுண்டாயினர். இம்மஹானின் இளையமனையாள் தோதாரம்பி என்ற ஒரு வைஷ்ணவப் பெண் இக்கருத்து பரிமளக்கிரந்தம் 3-வது அத்தியாயத்தின் முடிவிலுள்ள சுலோகத்தால் வெளியாகிறது.

वैकुण्ठाचार्यवंशाम्बुधिहिमकिरणश्रीमदद्वैतविद्या-
चार्यश्रीरङ्गराजाह्वयविसृतयशो विश्वजिद्याजिसूनोः ।
ग्रन्थे कल्पद्रुमपरिमळे सर्वजिद्याजिनोऽस्मिन्
पूर्णः पादोऽजनिष्ट भ्रमरहितहिते निर्विशेषप्रधानः ॥

வைகுண்டாச்சார்யர், பிரஸித்தான ஒரு வைஷ்ணவர் இவரை ரங்காராஜர் என்றும் அழைப்பார்கள். அவருடைய வம்சம் என்றால் தௌஹித்ரவம்சம். அவ்வம்சமாகிற சமுத்திரத்திற்குச் சந்திரனும், ஸ்ரீமானும், அத்வைத வித்யாச்சார்யாளும், ஸ்ரீ ரங்கராஜன் என்னும் பிரஸித்தி பெற்றவருமான விச்வஜித்யாகஞ் செய்தவரின் புதல்வனான(அப்பய்ய தீக்ஷிதாளின்) வேதாந்தகல்பத்ரும வியாக்கியானமான பரிமளத்தில், பிரமமற்றவரின் நன்மைக்காகக் கூறப்பட்ட, நிர்விசேஷப் பிரதானமான பாதம் முற்றிற்று என்பது இச்செய்யுளின் பொருள், முன்னோர் இவ்வாறு கூறுகின்றனர்.

ஒரு தருணத்தில் ஆச்சார்ய தீக்ஷிதர் தான் பரிவாரத்தோடு கிராமத்திலிருந்து புறப்பட்டுப் போகும்போது, நடுவழியில் ஒரு வைஷ்ணவக் கிராமத்தின் அருகாமையிலுள்ள தடாகக்கரையில் ஸாயங்காலத்தில் செய்யவேண்டிய அனுஷ்டானத்தை முடித்துக் கொண்டிருக்கும்போது, பத்துப்பதினாறு வயதுள்ள அவ்வக்கிரஹாரத்துப் பெண்களில் சிலர் விளையாடிவிட்டு, முப்பது வயதுள்ள தீக்ஷிதாளின் ரூபலாவண்ய பூஷணங்களைக்கண்டு வியந்து ஆவலுடன் சிறிது நேரந்தங்கிக் கண்ணுற்று, இனி இங்கு இருப்பது தகுதியல்லவென்று நினைத்துத் தங்கள் தங்கள் இல்லஞ் சென்றனர்.

(தொடரும்)

K. V. சுப்பிரமணியசாஸ்திரி.